டிருக்கின்றேன். அது தவிர தேசீய நெடுஞ்சாலை பிரிவு மூலம் அமைக்கப்போகும் திருநெல்வேலி பை-பாஸ் என்று சொல்லப்படுகின்ற புறவழிச்சாலையில் மற்றொரு ரெயில்வே மேம்பாலம் அமைக்கின்ற திட்டமும் பரிசீலனையில் உள்ளது. ஆகவே, தச்சநல்லூர் ரெயில்வே கேட்டுக்கு மேம்பாலம் அமைக்க அவசியம் இல்லை என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 93. திரு. பி.வி. இராஜேந்திரன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

93—

ஊராட்சி ஒன்றியங்களுக்கு டிராக்டர்.

*5429 திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் டிராக்டர் வழங்கி அதனை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு டிராக்டர் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

முற்பகல் 10-20

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்பு சட்டத்தை நமது தேசிய கொள்கை வாயிலாக ஏற்று இன்றைக்கு, குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்திலெல்லாம் மிகப் பெரிய, நிலவுடமை எல்லாம் தகர்ந்து சிறு மற்றும் குறு விவசாயிகள் நிலம் உள்ளவர்களாக ஆகி இருக்கின்ற இந்த நேரத்தில் எல்லா ஒன்றியங்களிலும் டிராக்டர் இல்லை. இரண்டாவதாக, தனியாரிடம் போனால் ஒரு மணி நேரத்திற்கான வாடகை மிக அதிகமாக, அவர்களிட மிருந்து வசூல் செய்யப்படுகிறது. இரண்டு மூன்று ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு நிச்சயமாக டிராக்டர்கள் நமது அக்ரோ என்ஜினியரிங் வாயிலாகக்கூட கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. அதனால் கூடுதலாக, ஜெனரல் பண்ட் அதிகமாக இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவாவது டிராக்டர்களை வழங்கவேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பொறியியல் துறை சார்பாக மாவட்ட தலைநகரங்களிலும், கோட்ட தலைநகரங்களிலும் 177 டிராக்டர்கள் இருக்கின்றன. அவைகள் வேளாண் பணிக்குப் பயன் படுத்தப்படுகின்றன. குறைந்த வாடகையாக ஒரு மணிக்கு 110 ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. அதில் தாழ்த்தப்பட்ட, பழங்குடிமக்களுக்கு 50 சதம் மானியமாக அரசு வழங்குகிறது என்பதை தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்ரோ என்ஜினியரிங்கைப் பற்றி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய கேள்வியே, ஒன்றியங்கள் வாயிலாக அதைச் செய்து தர முடியுமா என்பதுதான். அதிலும் தமிழ் நாட்டிலே 177 டிராக்டர்கள்தான் அக்ரோ என்ஜினியரிங் மூலமாக இயங்குகிறது என்று சொன்னால் அதிலே நிச்சயமாக, மெக்கானிக்கல் ரீசனுக்காக 50 வண்டிகளாவது ஓடாமல்தான் இருக்க முடியும். அதனால் அரசு இதை நிச்சயமாக பரிவோடு பரிசீலிக்க வேண்டும். அப்படி பரிசீலிக்குமா என்பதை உங்கள் வாயிலாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிதிநிலைமையைக் கருதி வருகின்ற ஆண்டில் இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய தொழில் நுட்பங்களின் அடிப்படையில் பல ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்ட வேளாண்மைக் கருவிகள் பல இலட்ச ரூபாய் மதிப்பில் ஒவ்வொரு வேளாண்மை விரிவாக்க மையத்திலும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவற்றினை பொது ஏலம் விடுவதன் மூலமாக அரசுக்கு நிதி வருவாய் இருக்கிறது என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெய்சன் ஜேக்கப், இந்தக் கேள்வி ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் டிராக்டர் வழங்குவது பற்றியது. பழுதடைந்து கிடக்கின்ற விவசாயக் கருவிகளை ஏலம் விடுவது பற்றியதல்ல. இதற்கு தனிக் கேள்வி போடவும், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

1992 பிப்ரவரி 7]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1967 ஆவது ஆண்டிற்கு முன்பு பல யூனியன்களிலே டிராக்டர்கள் அரசினால் வாங்கிக் கொடுக்கப்பட்டு சாதாரண மக்கள் உபயோகப்படுத்தி வந்தார்கள். அதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, நம்முடைய மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னது போன்று, எந்தெந்த யூனியன்களில் பணம் இருக்கிறதோ அந்த அந்த யூனியன்களிலாவது டிராக்டர்களை வாங்கி வைப்பதற்கான ஒரு நிலையை அரசாங்கம் உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அக்கா பொன்னம்மாள் அவர்கள் கேட்கின்ற கேள்வி, உள்ளாட்சித் துறையிலே ஒரு காலத்திலே இருந்தது. எனவே, அதுபற்றி தனிக் கேள்வி போட்டால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 94. திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

94—

உர விநியோகத்தைக் கண்காணிக்க குழு.

* 6148 திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கும் உரங்கள் முறையாக விநியோகிக்கப்படுகின்றனவா என கண்காணிக்க அரசு ஒரு குழு நியமிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கப்படும் உரங்கள் முறையாக வழங்கப்படுவதற்கு வேளாண் உதவி அலுவலர்கள் அடையாள அட்டை வழங்குகிறார்கள். இதன் அடிப்படையில் உரம் வழங்கப்படுகிறது. இவை சரியாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை மேல் அலுவலர்கள் ஆய்வு செய்கிறார்கள். மேலும் இதனை உயர் அலுவலர்கள் தணிக்கை செய்கிறார்கள். எனவே இதனைக் கண்காணிக்க தனிக் குழு அமைக்கத் தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது.